# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு - மதிப்பீட்டுத் தாள்

# 2020 - 2021

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:.......................................................... நேரம்: 120 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. முதலெழுத்துகள் ________________ .
   ( 30, 12, 18 )

2. முழங்கல் என்பது ________________ .
   ( ஒலித்தல் , மறைதல், தோன்றுதல் )

3. தமிழரின் சிறந்த கொண்டாட்டங்களில் ஒன்று ________________ .
   ( நத்தார்விழா, ஆடிப்பிறப்பு, ஆண்டுவிழா )

4. இனியன் நாடகம் ________________ .
   ( செதுக்கினான், நடித்தான், மீட்டினான் )

5. **பழமொழி:**
   முயற்சி உடையார் ________________ அடையார்.
   ( இகழ்ச்சி, புகழ்ச்சி, பெருமை )

6. விலங்குத் தோலினால் செய்யப்படும் இசைக்கருவி ____________ .
   ( யாழ், பறை, வீணை )

7. பேச்சுப்போட்டி ________________ தொடங்க உள்ளது?
   ( இப்பொழுது, அப்பொழுது, எப்பொழுது )

8. நேற்று, நான் வானொலியில் தமிழ்ச் செய்தி________________ .
   ( கேட்கின்றேன், கேட்பேன், கேட்டேன் )

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC

9. **நொடி:**

இரவெல்லாம் பூங்காடு; பகலெல்லாம் வெறுங்காடு அது

__________________

( நிலா, வானம், மலை )

10. பூக்கடையில் __________________ப் பூக்கள் காணப்படுகின்றன.

( வண்ணவண்ண , மெல்லமெல்ல, பார்க்கப்பார்க்க )

11. இலக்கண நூல்களில் முதன்மையானது __________________ .

( திருக்குறள், தொல்காப்பியம், புறநானூறு )

12. பலா + சுளை = __________________ .

( பலாச்சுளை, பலாசுளை, பலாப்சுளை )

13. **குறள்:**

தொட்டனைத்து ஊறும் __________________ மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

( மனற்கேணி, மணற்கேணி, மனற்கேனி )

14. 75 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் __________________ .

( எழுபத்தைந்து, எலுபத்தைந்து, எளுபத்தைந்து )

15. நாம் பாடங்களை ஐயந்தீரக் __________________ வேண்டும்.

( பழக, கற்க, நடக்க )

16. தேன்மொழி ____________ எனச் சிரித்தாள்.

( கலகல, சலசல, மடமட )

17. யாழிசைப்போர் ____________ என அழைக்கப்பட்டனர்.

( கூத்தர், விறலியர், பாணர் )

18. அவனுக்கு அவள் போல, தோழனுக்குத்____________ .

( தோழி, நண்பி, மாணவி )

19. தாயகத்தில் பனைமரங்கள் அதிகமாகக் காணப்பட்டன.
இன்று ____________ அழிக்கப்பட்டு வருகின்றன.

( அது, அவை, அவர்கள் )

20. நான் எழுதுகின்றேன். நாங்கள் ____________ .
( எழுதினாய், எழுதுவீர்கள், எழுதுகின்றோம் )

21. ஆடிப்பிறப்பன்று நாம் ____________ எழுந்து நீராட வேண்டும்.

( வைகறையில், மாலையில், இரவில் )

22. காட்டில் செருக்குடன் வாழ்ந்த விலங்கு ____________.

( மான், நரி, சிங்கம் )

23. உண்மையான நண்பர்களின் நட்பு எமக்கு ______ த் தரும்.

( உயர்வை, தாழ்வை, தீமையை )

24. உழுந்திலிருந்து செய்யப்படும் உணவு ______ .

( கடலை, அவல், வடை )

25. அரசன் போருக்குச் செல்லும்போது முழங்கும் முழவு

______ .

( போர்முரசு, மணமுரசு, கொடைமுரசு )

26. நாலடியார் ______ அடிகளைக் கொண்டது.

( மூன்று, இரண்டு, நான்கு )

27. இலங்கை வேந்தன் ______ .

( இராவணன், இராமர், அதியர்மான் )

28. நல்லபண்புள்ள மாந்தனை உருவாக்குவது ______ .

( நாடு, உலகம், குடும்பம் )

29. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ______ .

( வெள்ளி, தை, பங்குனி )

30. பெரிது என்பதன் எதிர்ச்சொல் ______ .

( அரிது, சிறிது, செறிது )

புள்ளிகள் 30



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC

2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| மளமள | சேர்ந்து | எழுதிய |
| நல்லநல்ல | மடமட | |

1. சோழன் எல்லோருடனும் ________________ விளையாடுவான்.

2. குயிலி வீட்டுப்பாடங்களை ________________ என்று செய்து முடித்தாள்.

3. இளங்கோ அடிகள் ________________ சிலப்பதிகாரம் தமிழர் பண்பாட்டைக் கூறுகிறது.

4. சிறுவன் தண்ணீரை ________________ என்று குடித்தான்.

5. அம்மா ________________ கதைகள் சொல்லுவார்.

புள்ளிகள் 05



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC

**3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. மாடு பசுமையான புல்வெளியில் புல் ________________ .

2. நாங்கள் விளையாட்டுத்திடலுக்கு நடந்து ________________ .

3. நாம் என்றும் உண்மை பேச ________________ .

4. **பழமொழி:** பழகப்பழக பாலும் ________________ .

5. அடுத்தமாதம் நான் மிதியுந்து ________________ .

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிட மொழியில் எழுதுக.**

1. தென்னை ________________
2. காற்பந்து ________________
3. வளையல் ________________
4. முகக்கவசம் ________________
5. மருத்துவமனை ________________

புள்ளிகள் 05

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC

**5) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

எமது தமிழ்ப்பள்ளியில் பரிசளிப்பு விழா 15.05.2018 அன்று நடைபெற்றது. காலை ஒன்பது மணியளவில் எல்லோரும் பாடசாலைக்கு வந்தார்கள். முதலில் மங்கல விளக்கு ஏற்றல் நிகழ்வு நடைபெற்றது. எமது முதல்வர் வரவேற்புரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் தொடங்கின. நடனம், நாடகம், வில்லுப்பாட்டு ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின்பு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிகள் மாலை நான்கு மணிக்கு முடிவடைந்ததும் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம்.

1. தமிழ்ப்பள்ளியில் பரிசளிப்புவிழா எப்பொழுது நடைபெற்றது?

___________________________________________

2. முதலில் நடந்த நிகழ்வு எது?

___________________________________________

3. வரவேற்புரை நிகழ்த்தியவர் யார்?

___________________________________________

4. நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள் இரண்டு தருக.

___________________________________________

5. தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு எவை வழங்கப்பட்டன?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC

6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| நீர் | ஊற்றுவார் | பழமரங்களும் |
| தக்காளி | கிணறும் | |

எழிலனின் வீட்டுக்குப் பின்னால் சிறிய தோட்டம் ஒன்று இருக்கிறது. அத்தோட்டத்தில் ____________ , மிளகாய், கத்தரி போன்ற காய்கறிச் செடிகளும் மா, பலா போன்ற ____________ இருக்கின்றன. அருகே அழகான வண்ணவண்ணப் பூக்களும் பூத்திருக்கின்றன. தோட்டத்தில் ஒரு ஆழமான ____________ இருக்கின்றது. அக்கிணற்றில் இருந்தே தோட்டத்துக்குத் தேவையான ____________ பெறப்படுகிறது. எழிலனின் அப்பா ஒவ்வொருநாளும் காலையில் மரஞ் செடிகளுக்கு நீர் ____________ . அதனால் தோட்டம் பச்சைப்பசேல் என்று காட்சியளிக்கிறது. எழிலன் அதைப் பார்த்து மகிழ்ந்தவாறு காய்கறிகளைப் பறித்தான்.

புள்ளிகள் 10

7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்னும் பாடல் இடம்பெற்ற நூல் எது?

______________________________

______________________________

2. மங்கல நிகழ்வுகளில் முதன்மையான இடத்தைப் பெறும் இசைக்கருவி எது?

______________________________

______________________________

3. ஆடிப்பிறப்பு எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது?

______________________________

______________________________

4. உயிர் எழுத்துகள் எத்தனை?

______________________________

______________________________

5. சிங்கம் எதனுள் குதித்து இறந்தது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC

8) **தரப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைக் கட்டங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ரு | த் | து | வ | ர் |
| தா | | ந | ண் | டு | |
| ம | ஐ | ந் | து | | |
| ரை | | க | ங் | கா | ரு |
| கா | ர் | த் | தி | கை | |

**எ -கா**

குளத்தில் பூக்கும் பூ ______தாமரை______ .

1. கடலில் வாழும் உயிரி ____________________ .

2. எமது நோயைக் குணப்படுத்துபவர் ____________________ .

3. மாவீரர் நாள் கொண்டாடப்படும் மாதம் ____________________ .

4. ஒலிம்பிக் கொடியில் உள்ள வளையங்கள் ______________ .

5. குட்டியை வயிற்றுப்பையில் வைத்திருக்கும் விலங்கு

____________________ .

புள்ளிகள் 05

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC

**9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.**



ஒரு நாள் ஒரு சிறுமி காட்டு வழியால் தன் பாட்டியின் வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தாள். அப்பொழுது....

புள்ளிகள் 15



TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL TEDC